**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 04 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண். 184/2025-ல்**

**அசல் வழக்கு எண். 124/2016**

கண்ணன் .... மனுதாரர் / 2 ம் பிரதிவாதி

// **எதிர்** //

1. வசந்தா
2. சாந்தி
3. தமிழரசன் .... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ 2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.K.கோபாலகிருஷ்ணன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவின் அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் கொடுத்துள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1 A(3) CPC-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் :-**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கு சுவாதீன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதி தரப்பில் விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சொத்து

சம்மந்தப்பட்ட ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. ஆவணங்கள் சேகரித்து தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. மேற்படி ஆவணங்களை அங்கீகரித்துக் கொள்ளாவிடில் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டுவிடும். ஆகவே மேற்படி அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் கொடுத்துள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபணையின் சுருக்கம் :-**

மனுதாரரால் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் உண்மை நிலவரப்படிக்கும் நிலைநிற்க கூடியதல்ல. மனுவில் கண்டுள்ள ஏனைய சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்.

மேற்படி அசல் வழக்கானது வாதி/எதிர்மனுதாரரால் வசப்பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வாதி தரப்பு சாட்சியம் முழுவதுமாக முடிக்கப்பட்டு குறுக்கு விசாரணையும் பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டு அதன் பிறகு, 1ம் பிரதிவாதி அவரது தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தற்சமயம் 2ம் பிரதிவாதி நிரூபண வாக்குமூலம் அதனுடன் இடைநிலை மனு தாக்கல் செய்து இவ்வழக்கிற்கு சம்மந்தமே இல்லாத ஆவணங்களை குறியீடு செய்துகொள்ள அனுமதி கோரி மனு அளித்துள்ளார்.

மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதிகளுக்கு எவ்வித கட்சியும் இல்லை என்பதை உணர்ந்துகொண்ட பிறகு, மேற்படி வழக்கினை காலதாமதப்படுத்தி துர்லாபம் அடையலாம் என்ற கெட்ட எண்ணத்தில் பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் ஏற்கனவே பிரதிவாதிகள் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டு வாதிக்கு ஆதரவாக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் வாதியால் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு பிரதிவாதிகள் மேற்படி உத்தரவுகளை Set-Aside செய்து மேற்படி வழக்கினை பல ஆண்டுகளாக காலதாமதப்படுத்தி வருகிறார்கள்.

மேற்படி அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதி/மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள அவண எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணத்தினை வாதி/எதிர்மனுதாரர் கடுமையாக ஆட்சேபிக்கிறார். மேற்படி ஆவணமானது ஓர் பதிவு செய்யப்படாத மனுதாரரால் மோசடியாக ஏற்படுத்தப்பட்ட ஆவணமாகும். மேற்படி ஆவணமானது வாதியின் மகன் தமிழரசன் அவர்களால் மனுதாரருக்கு ஏற்படுத்தி கொடுக்கப்பட்டது என மனுதாரரின் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் மனுதாரரின் செல்வாக்கை தவறாக பயன்படுத்தி பெறப்பட்ட ஆவணமாகும். வாதிக்கு சொந்தமான தாவா சொத்தினை பொறுத்து வாதி எக்காலத்திலும் யாருக்கும் எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்தி கொடுக்கவில்லை. மேற்படி ஆவணமானது பதிவு செய்யப்படாத கிரய ஒப்பந்த ஆவணம், அதனை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய இயலாது.

மேற்படி அசல் வழக்கில் இடைநிலை மனுவில் கூடுதலாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை ஏற்க கோரிய மனுவில் உரிய காலத்துடன்

ஆவணங்களை தாக்கல் செய்யாததற்கு எவ்வித விளக்கங்கள் கொடுக்காமல் மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரரின் செல்வாக்கை தவறாக பயன்படுத்தி பெறப்பட்ட ஆவணங்கள் என்றும், மேற்படி ஆவணங்களுக்கும், அசல் வழக்கிற்கும் உள்ள தொடர்பை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் மோசடி செய்து உற்பத்தி செய்த ஆவணங்கள். மனுதாரர் அசல் வழக்கில் அவருக்குள்ள கட்சியினை நிரூபணம் செய்வதற்கு ஆதரவான ஆவணங்கள் என்று தெரிவித்து வழக்கினை திசை திருப்பும் நோக்கில் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் ஏற்புடையதல்ல. ஆகவே மனுதாரர்/2ம் பிரதிவாதி தாக்கல் செய்த மனுவினை எதிர்மனுதாரர்/வாதி செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் எதிருரையை தாக்கல் செய்துள்ளார்.

**4) இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**5) தீர்வு:-**

**1.** மனு, நிரூபண வாக்குமூலம், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** இம்மனுவினை பரிசீலணை செய்கையில், அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் சுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்து, எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பு சாட்சியம் முழுவதுமாக முடிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா

போடப்பட்டு, அதன் பிறகு 1ம் பிரதிவாதி அவரது தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டது. பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ள நிலையில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரிய வருகிறது.

**4.** மேற்படி ஆவணமானது அசல் வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும், மேற்படி வழக்கு சொத்தில் 2ம் பிரதிவாதி தரப்பில் விசாரணைக்ககா போடப்பட்டு, வழக்கு சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை எதிர்வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலாமல் போய்விட்டது. மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருக்கவில்லை. அசல் வழக்கை தீர்மானிப்பதற்கு முக்கியமான ஆவணம் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரருக்கு இயற்கை நீதியின் பொருட்டு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதாலும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்ட போதிலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்தவித கஷ்டமும் ஏற்படாது.

**5.** மேலும், எதிர்மனுதாருக்கு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்போகும் ஆவணத்தினைப் பொறுத்து பி.சா.1-ஐ மேற்படி ஆவணத்தின் தன்மை குறித்து குறுக்கு விசாரணை செய்வதற்கும், ஆவணத்தினை பொறுத்து ஆட்சேபணை செய்வதற்கும் வாய்ப்பு உள்ளது என்பதாலும், மேலும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், மேலும் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட காலம், வழக்கின் நிலை ஆகியவற்றினை கருத்திற்கொண்டும் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்றும் தீர்மானிக்கிறது.

**6) முடிவில்,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (04.07.2025 ) அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/- (**என். அழகேசன்)**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

**இருதரப்பிலும்** : இல்லை

ஒம்/- (**என். அழகேசன்)**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2025 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 04 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண். 184/2025-ல்**

**அசல் வழக்கு எண். 124/2016**

திரு.கண்ணன், த/பெ.பக்கிரிசாமி வன்னியர், இந்து, வசிப்பிடம் அக்ரஹாரம், ரெங்கநாதபுரம் கிராமம், மன்னார்குடி டி.மு. இலாக்கா மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... மனுதாரர்/2 ம் பிரதிவாதி

// எதிர்//

1. திருமதி.வசந்தா, வயது 55, க/பெ.சுப்ரமணியன், இந்து, சிவமதம், வசிப்பிடம் அக்ரஹாரம், ரெங்கநாதபுரம் கிராமம், ஆதிச்சபுரம் வழி, ரெங்கநாதபுரம் அஞ்சல், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
2. திருமதி.சாந்தி, வயது 40, க/பெ.கண்ணன், இந்து, வீட்டுக்குடித்தனம், வசிப்பிடம் அக்ரஹாரம், ரெங்கநாதபுரம் கிராமம், ஆதிச்சபுரம் வழி, ரெங்கநாதபுரம் அஞ்சல், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.
3. திரு.தமிழரசன், வயது 35, த/பெ.சுப்ரமணிய வன்னியர், இந்து, சிவமதம், வசிப்பிடம் அக்ரஹாரம், ரெங்கநாதபுரம் கிராமம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்.

.... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவின் அசல் வழக்கில் மனுதாரர் தரப்பில் கொடுத்துள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து அங்கீகரித்துக்கொள்ளும்படி அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1 A(3) CPC-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள் :-** 19.03.2025

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் :-** 21.03.2025

இம்மனுவின் மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/ 2 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.K.கோபாலகிருஷ்ணன், B.A., B.L., அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 04-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

ஒம்/- (**என். அழகேசன்)**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.